**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 90/2023

நாள் : 06.11.2025

பி.வா.சா.1 திரு.வெங்கடேஸ்வரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் பிரதிவாதியின் பவர் ஏஜெண்ட் என்றால் சரிதான். எதிர்வழக்குரையை பிரதிவாதி தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி நேரடியாக வந்து சாட்சி சொல்லாததற்கான காரணம் உள்ளதா என்றால் அவர் வயதானவர் என்பதால் நீதிமன்றத்திற்கு வர முடியவில்லை. அவர் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்க இயலவில்லை என்பதால், நீதிமன்ற ஆணையர் மூலம் சாட்சி விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதி எனக்கு கொடுத்த அதிகார ஆவணத்தில், நான் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவோ, இந்த வழக்கில் சமரசம் செய்வதற்கோ எனக்கு பிரத்யேகமாக அதிகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வழக்குரையை படித்துப்பார்த்து புரிந்து கொண்டுதான் என் தாயார் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மைதான் என்றால் சரிதான்.

ஆதியில் தாவா சொத்து உலகப்பநாடாருக்கு பாத்தியமான சொத்து என்றால் சரிதான். உலகப்பநாடார் 1948ம் ஆண்டு தன்னுடைய சில சொத்துக்களை ராமநாடாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த 1948ம் ஆண்டு கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.06 17:24:43 +0530

உலகப்பநாடார், ராமநாடாருக்கு 1948ம் ஆண்டு 8 இலக்க சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார்.

தாவா சொத்திற்கு வடக்கே எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு வடக்கே ஊரணி உள்ளது என்றால் சரிதான். ஊரணியின் கிழமேல் அளவு சுமார் அரை கிமீ இருக்கும் என்றால் சரியல்ல, அவ்வளவு இருக்காது. ஊரணி 5 ஏக்கர் பரப்பில் உள்ளது. அந்த ஊரணிக்கு கிழக்கே 2 ஏக்கர் நிலம் உள்ளது. அதற்கு கிழக்கே சம்பை கிராமத்திற்கு செல்லும் தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். உலகப்பநாடார் 1948ல் கிரையம் கொடுத்த சொத்தில் நாங்கள் பாத்தியம் கோரவில்லை என்றால் சரியல்ல. அதிலும் நாங்கள் பாத்தியம் கோருகிறோம்.

உலகப்பநாடாரும், அவரது பிள்ளைகளும் 1952ம் வருடம் பாகம் பிரித்துக்கொண்டதாக எதிர் வழக்குரையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம்.

நாங்கள் எப்படி தாவா சொத்தில் பாத்தியம் கோருகிறோம் என்றால் 1952ல் உலகப்பநாடார் தன் மூன்று மனைவிகளுக்கு மூன்று பாகங்களாக கொடுத்துள்ளார். அதில் தாவா சொத்து மூன்றாவது மனைவி கல்யாணி அம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆகும். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அந்த பாகப்பத்திரத்தில் தாவா சொத்து 3 வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படுவதுதான் மேற்படி உலகப்பநாடார் எழுதி வைத்த பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் (வா.சா.ஆ.8) ஆகும். அந்த பத்திரத்தில் 6வது பக்கத்தில் 3வது இலக்க சொத்திற்கு நான்குமால் குறிப்பிடும் போது, ஊரணிக்கு தெற்கு, ராமநாடார் புஞ்சைக்கு வடக்கு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 8 மரைக்கால் விரையடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து இருக்கும் பகுதியில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.06 17:24:46 +0530

முன்பு சொத்துக்களின் பரப்பு குறுக்கம் என்றும் மரைக்கல் என்றும், விரையடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 40/1A நிலத்தின் நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்குத் தெரியாது. அதன் தென்வடல் அளவு, மற்றும் கிழமேல் அளவு எனக்குத் தெரியுமா என்றால் தெரியும், தற்போது ஞாபகம் இல்லை. சர்வே எண். 40/1A நிலத்தின் பட்டா, புலப்பட சுவடு மற்றும் அதற்கான ஆவணங்கள் எங்களிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த சர்வே எண். 40/1A சொத்தின் பட்டா மற்றும் மற்ற ஆவணங்களை பார்த்தால் எங்களுக்கு எவ்வளவு பாத்தியம் என்ற விவரம் தெரிய வரும் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

தாவா சொத்துக்களுக்கு மேற்கே வழக்கு தாக்கல் செய்தபோது தென்வடல் ரோடு இருந்தது என்றால் அப்போதுதான் இருந்தது, அதற்கு முன்பு இல்லை. அந்த ரோடு வடக்காக சென்று ஊரணிக்கரையை போய் சேருகிறது என்றால் சரியல்ல. சர்வே எண். 40/1A க்கு மேற்கே தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.40/1A க்கு தெற்கேதான் சர்வே எண். 40/1B சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான்.

சர்வே எண். 40/1A கண்ட சொத்து முன்பு உலகப்பநாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்துகளுக்கு மேற்கே உள்ள ரோடு முன்பு உலகப்பநாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்தது. அந்த இடத்தில்தான் ரோடு போட்டார்கள். ராமநாடாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் கண்ட 7 இலக்க சொத்துக்களையும் நான் படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் 1 இலக்க சொத்து ஆக கிழக்கில் இருப்பதாகவும், 2 வது இலக்க சொத்து நடுவில் இருப்பதாகவும், 3 வது இலக்க சொத்து 2 ம் இலக்க சொத்திற்கு மேற்கில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அந்த பத்திரத்தை முழுமையாக படித்துப்பார்க்கவில்லை என்றால் சரியல்ல.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.06 17:24:50 +0530

உலகப்ப நாடார், ராமநாடாருக்கு ஊரணிக்கு தெற்குப்பக்கம் உள்ள சர்வே எண். 40/1A கண்ட சொத்திற்கு தெற்குபுறம் மேலே குறிப்பிட்ட 3 இலக்க சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அவர் கிரையம் கொடுத்தது உண்மைதான். சாட்சி அவ்வாறு இல்லை என்று கூறுகிறார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.06 17:24:53 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .